**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.141/2025
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : இளையராஜா | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

19.06.2026

(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர்).

**முதல் விசாரணை**

1) நான் தற்போது முதுகுளத்தூர் காவல்நிலையத்தில் இரண்டாம்நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.03.2025ம் தேதி நான் தேரிருவேலி காவல்நிலையத்தில் இரண்டாம்நிலைக் காவலராக பணியில் இருந்தபோது மாலை சுமார் 06.30 மணிக்கு நானும், தலைமைக் காவலர் திரு.விஸ்வநாதன் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.முருகேசன் ஆகியோர் புகையிலை மற்றும் மதுபாட்டில்கள் சம்மந்தமாக தேரிருவேலி எல்லைக்குள் சென்றபோது அங்கு உள்ள டாஸ்மாக் அருகில் உள்ள ஒரு கடையில் Black Pearl மதுபாட்டில் இருந்தது. அதன் அருகில் 90 ML அளவுள்ள மது பிளாஸ்டிக் டம்பளரில் இருந்தது. மேலும் ரூபாய் 500/- பணம் ஆகியவற்றை அங்கிருந்த ஆஜர் 1ம் எதிரியான திருமூர்த்தி வைத்திருந்தார். ஆஜர் 2ம் எதிரியும் அங்கு இருந்தார்.

2) அவர்களுடைய பெயர்களை கேட்டு தெரிந்துகொண்டோம். மாலை சுமார் 06.50 மணியளவில் மதுபாட்டில்கள், பிளாஸ்டிக் டம்ளர் மற்றும் ரூபாய் 500/- பணத்தை சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.முருகேசன் அவர்கள் கைப்பற்றி

அங்கு அத்தாட்சி தயார் செய்து அங்கு யாரும் இல்லாததால் அந்த அத்தாட்சியில் நானும், தலைமைக் காவலர் திரு.விஸ்வநாதனும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அத்தாட்சி அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகைப்படங்கள் (எண்ணம்–2) அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின் ஆஜர் எதிரிகளை தேரிருவேலி காவல்நிலையத்திற்கு அழைத்து சென்று சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.முருகேசன் அவர்கள் குற்ற எண்.13/2025 சட்டப்பிரிவு 4(1)(A), 4(1)(B) TNP Act ன் கீழ் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்தார். நான் சிறப்பு சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். புலன்விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1) வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று எத்தனை மணிக்கு காவல்நிலையத்திலிருந்து கிளம்பினோம் என்றால் மாலை 06.00 மணி இருக்கும். அன்றைய தினம் முதலில் எந்த கிராமத்திற்கு சென்றோம் என்றால் தேரிருவேலி நான்கு முனை ரோட்டிற்கும், அதன்பிறகு கிழக்கு தெருவிற்கும் சென்றோம், கிழக்கு தெருவிற்கும், நான்கு முனை சந்திப்பிற்கும் சுமார் எவ்வளவு தொலைவு இருக்கும்என்றால் சுமார் அரைகிலோ மீட்டர் தொலைவு இருக்கும். தேரிருவேலி நான்கு முனை சந்திற்கு சென்றுவிட்டு அரசு மதுபானக்கடைக்கு சென்றோமா என்றால் நான்கு முனை ரோட்டிற்கு சென்றபின்னர் தான் மதுபானக்கடைக்கு செல்ல முடியும்.

2) கிழக்கு தெருவிற்கு புறப்படும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் 06.15 இருக்கும். கிழக்கு தெரு சென்று அடையும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் 06.15 மணி இருக்கும். இரண்டு இடங்களுக்கும் தொலைவு சுமார் 5 நிமிடங்கள் தான் இருக்கும். நாங்கள் காவல்நிலையத்திற்கு திரும்ப செல்லும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் சுமார் 07.15 மணி இருக்கும். இந்த வழக்கில் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்தபின்பு

அத்தாட்சி தயார் செய்யப்பட்டதா அல்லது அத்தாட்சி தயார் செய்யப்பட்டபின்பு முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா என்றால் அத்தாட்சி சம்பவ இடத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது.

3) நான் கையொப்பம் செய்ததாக சொல்லப்படும் அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட மது வகை என்ன என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் Black Pearl என்று குறிப்பிடப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுபாட்டில் என்ன வகையானது என்று குறிப்பாக Black Pearl என்று எழுதப்படவில்லை என்றால் சரிதான். என்னை விசாரணை அதிகாரி விசாரித்தபோதும் கைப்பற்றப்பட்ட மதுபாட்டில் Black Pearl வகை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து 1ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் ரூபாய் 500ன் வரிசை எண் அத்தாட்சியில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இருந்தது, தற்போது வரிசை எண் நினைவில் இல்லை. வழக்கு சம்பவம்நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் உள்ள மதுபானக்கடையின் எண் என்னவென்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4) அத்தாட்சியில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பிளாஸ்டிக் டம்ளர் எத்தனை எண்ணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஒரு சரம் டம்ளர் இருக்கும் சுமார் எத்தனை டம்ளர்கள் இருக்கும் என்று எனக்கு தெரியாது. அத்தாட்சியில் எத்தனை பிளாஸ்டிக் டம்ளர்கள் கைப்பற்றப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளதாக என்றால் இல்லை. பிளாஸ்டிக் டம்ளரில் உள்ள மதுபானம் தண்ணீர் கலந்த நிலையில் இருந்ததாக அல்லது தண்ணீர் கலக்காத நிலையில் இருந்ததா என்றால் டம்ளரில் மது இருந்தது அதில் தண்ணீர் கலந்து இருந்ததா என்று எனக்கு தெரியாது. டம்ளரில் மது பாதி அளவில் இருந்ததா அல்லது முழுமையாக இருந்ததாக என்றால் பகுதி அளவாகத்தான் இருந்தது. மதுவை ரசாயான பரிசோதனைக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான்.

5) காவல்துறை அதிகாரிகளால் புள்ளிவிபரத்திற்காக போடப்பட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், மேலதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க எதிரிகள் மீதுபோடப்பட்ட பொய் வழக்கு என்றாலும் எதிரிகளுக்கும் வழக்கிற்கும்எந்த சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.141/2025
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : முருகேசன் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

19.06.2026

(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர்).

**முதல் விசாரணை**

1) நான் தற்போது தேரிருவேலி காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.03.2025ம் தேதி நான் முதுகுளத்தூர் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்து அயல்பணிக்காரணமாக தேரிருவேலி காவல்நிலையத்தில் வந்தேன். அன்றைய தினம் மாலை 18.45 மணியளவில் மதுவிலக்கு மற்றும் புகையிலை சம்மந்தமாக நானும், தலைமைக்காவலர் திரு.விஸ்வநாதன் மற்றும் காவலர் திரு.இளையராஜா ஆகியோர் தேரிருவேலியிலிருந்து கிழக்கே உள்ள டாஸ்மாக் கடைக்கு ரோந்து சென்றபோது அதனுடன் இணைந்த கட்டிடத்தில் பின்னால் பெயர் விலாசம் கேட்டுதெரிந்துகொண்ட மூர்த்தி, பாஸ்கரன் ஆகியோர் அரசு அனுமதியின்றி 180ML அளவுள்ள மதுபாட்டில்கள், 90ML அளவுள்ள மதுவை பிளாஸ்டிக் டம்ளரில் சுயலாபம் கருதி விற்பனை செய்தனர்.

2) நான் மேற்படி நபர்களிடம் இருந்த அந்த லேபிள் இல்லாத மதுபாட்டில் மற்றும் பிளாஸ்டிக் டம்ளர், விற்பனை செய்து வைத்திருந்த ரூ.500 ஆகியவற்றை 18.50 மணிக்கு யாரும் சாட்சி இல்லாததால் என்னுடன் இருந்த

காவலர்களை வைத்து அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினேன். மேற்படி மூர்த்தி மற்றும் பாஸ்கரன் ஆகியோர்கள் இந்நீதிமன்றத்தில் உள்ள ஆஜர் எதிரிகள் ஆகும். பின்பு 19.20 மணிக்கு மேற்படி எதிரிகளை நிலையம் அழைத்து வந்து அவர்கள் மீது குற்ற எண்.13/2025 சட்டப்பிரிவு 4(1)(A), 4(1)(B) TNP Act ன் கீழ் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்தேன். **முதல்தகவல் அறிக்கை அசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரிகளுக்கு U/s.35 BNSS ன் சம்மன் கொடுத்து குறித்த நேரத்தில் ஆஜராகுமாறு அனுப்பிவைத்தேன். பின்பு வழக்கு கோப்பை சார்பு ஆய்வாளர் திருமதி. சத்யா அவர்களிடம் மேல்விசாரணைக்காக வைத்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அரசு மதுபானக்கடையின் எண் தெரியுமா என்றால் சரியாக நினைவில் இல்லை. வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் உள்ள மதுபானக்கடை அரசு அனுமதி பெற்ற டாஸ்மாக் கடை உள்ளதா என்றால் இல்லை. வழக்கு சம்பவம் நடந்த இடத்திற்கும் மதுபானக்கடைக்கும் சுமார் 5 அடி தொலைவு இருக்குமா என்றால் இருக்கும். வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் அரசு மதுபானக்கடையில் பணிபுரிந்த ஊழியர்களும், பொதுமக்களும் இருந்தார்கள் என்றால் சரிதான். மதுபானக்கடையில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் சுமார் 6, 7 நபர்கள் இருந்தார்கள். அவர்களை நான் விசாரித்து வழக்கில் சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால்சரிதான்

2) வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கடை யாருக்கு சொந்தமானது என்று எனக்கு தெரியாது என்றால் தெரியும் கருப்புசாமி என்பவரது கடை. எனது விசாரணையிலும் கருப்புசாமிக்கு சொந்தமான கடை என்று தான் கூறியுள்ளேன் என்றால் என்னை விசாரணை செய்யும்போது கேட்கவில்லை அதனால் நான் கூறவில்லை. நான்தயார் செய்த அத்தாட்சியில் யாருக்கு சொந்தமான கடையில் வைத்து சான்று பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக

குறிப்பிட்டுள்ளேன் என்றால் அத்தாட்சியில் அதுபற்றி குறிப்பிடவில்லை. நான் தயார் செய்ததாக சொல்லப்பப்படும் அத்தாட்சியில் மதுகடையில் பெயரை குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. எதிரிகள் யாருக்கு மதுவை ஊற்றிக்கொடுக்கும்போது நான் இருந்தேன் என்றால் பெயர் குறிப்பிட்டு எனக்கு தெரியாது, ஆனால் அந்த இடத்தில் அந்த நேரத்தில் மேற்படி நபர் இருந்தார் என்றால் சரிதான். அவரை நான் வழக்கில் சாட்சியாகவோ, எதிரியாகவோ இவ்வழக்கில் சேர்க்கவில்லைஎன்றால்சரிதான். கைப்பற்றிய மதுபாட்டில்களை ரசாயன பரிசோதனைக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். திறந்தநிலையில் உள்ளஒரு பாட்டிலில் உள்ள திரவத்தை முகர்ந்து பார்த்தவுடன் முகந்து பார்த்தவுடன் அது மதுதான் என்று கண்டறியக்கூடிய பயிற்சி எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்தபின்பு அத்தாட்சி தயார் செய்யப்பட்டதா அல்லது அத்தாட்சி தயார் செய்யப்பட்டபின்பு முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா என்றால் அத்தாட்சி தயார் செய்தபின்னர் முதல்தகவல் அறிக்கை தயாரிக்கப்பட்டது.

3) போலீஸ் ஸ்டாண்டிங் ஆர்டர், BNSS, CRPC படி முதல்தகவல் அறிக்கை தயார் செய்தபின்னர் தான் அத்தாட்சி தயார் செய்ய வேண்டும் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் தயார் செய்ததாக சொல்லப்படும் அத்தாட்சியில் யார் சொல்லி குற்ற எண் குறிப்பிட்டேன் என்றால் ஆய்வாளர் சொன்னதன் அடிப்படையில் தான் குறிப்பிட்டேன். நான் தயார் செய்ததாக சொல்லப்படும் அத்தாட்சியில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் ரூபாயின் எண் என்னவென்று எனக்கு தெரியுமா என்றால் தற்போது நினைவில் இல்லை. நான் தயார் செய்ததாக சொல்லப்படும் அத்தாட்சியில் என்ன எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் எனக்கு தற்போதுநினைவில் இல்லை. நான் தயார் செய்ததாக சொல்லப்படும் அத்தாட்சியில் ரூபாய் எண்ணை குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். எத்தனை மணிக்கு வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை யார் முன்னிலையில்,

எங்கு வைத்து எத்தனை மணிக்கு கைப்பற்றினேன் என்றால் 20.03.2025ம் தேதி மாலை 18.50 மணிக்கு தலைமைக்காவலர் 175 திரு.விஸ்வநாதன், காவலர் 1422 திரு.இளையராஜா முன்னியிலையில் எடுத்தேன். தலைமைக்காவலர் திரு.விஸ்வநாதன் புகைப்படம் எடுத்தார். யார் போட்டோவை பிரிண்ட் எடுத்து கொடுத்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. காவல்துறை அதிகாரிகளால் புள்ளிவிபரத்திற்காக போடப்பட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், மேலதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க எதிரிகள் மீது போடப்பட்ட பொய் வழக்கு என்றாலும் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்வதுபோல் சொன்னநேரத்தில் எதிரிகளை கைது செய்யவும் இல்லை வழக்கின் சான்று ஆவணங்களை கைப்பற்றவும் இல்லை என்றால் சரியல்ல.